# Tamil Studies: Dravidian Movement Rational Thought, Feminist Thought, Social Thought - Transgenders from the Perspective of The Dravidian Movement

**Dr.C. Angayarkanni**
*Research Supervisor, Associate Professor & Head,*
*Department of The Tamil, Chikkaiah Government Arts And Science College,*
*Erode*

**P. Tamilselvi**
*Ph.D. Research Scholar (Part Time), Department of The Tamil*
*Chikkaiah Government Arts And Science College, Erode*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358681

**Abstract**

*Transgender individuals have every right and freedom to live and move about in this society like any other human being. However, in practice, this is often not accepted by society. Despite this, society creates an environment where transgender individuals who attempt to live in this society face various hardships and crises. There is a need for everyone to take action to ensure that transgender individuals can live freely and with dignity in this society, just like men and women, and to rescue them from their current predicament. The Dravidian movement has achieved various accomplishments for transgender people. Numerous studies have been conducted on the Dravidian movement concerning rationalist thought, feminist thought, and social thought. However, in the present era, transgender individuals are improving their livelihoods by engaging in government jobs and self-employment. Studies on transgender people from the perspective of the Dravidian movement have not been undertaken. If research is conducted on this topic in the future, transgender individuals will gain recognition in society.*

***Keywords:*** *Transgender, society, Dravidian movement*

**Bibliography**

1. Father Periyar, Why should one be a rationalist?
2. Padma Bharati, Social Mapping of Transgender People.
3. K. Ayyappan, Aravaniyam
4. Consciousness and Form.

# தமிழியல் ஆய்வுகள் : திராவிட இயக்க பகுத்தறிவுச் சிந்தனை, பெண்ணியச் சிந்தனை, சமுதாயச் சிந்தனை – திராவிட இயக்கப் பார்வையில் திருநங்கைகள்

***முனைவர் சி. அங்கயற்கண்ணி***
நெறியாளர் மற்றும் இணைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

***பெ. தமிழ்ச்செல்வி***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை,
சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு

***ஆய்வுச் சுருக்கம்***
*இந்த சமுதாயத்தில் சக மனிதர்களைப் போல வாழவும் நடமாடவும் திருநங்கைகளுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் உண்டு. ஆனால் நடைமுறையில் இது பெரும்பாலும் சமுதாயத்தில் ஏற்றப்படவில்லை. அதையும் மீறி இந்த சமுதாயத்தில் வாழ முற்படும் திருநங்கைகள் பல்வேறு இன்னல்களையும், நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டிய சூழலை இந்த சமுதாயம் ஏற்படுத்தி கொடுக்கிறது. ஆண் பெண் போலவும் திருநங்கையர்களுக்கு சுதந்திரமாகவும், தன்மானத்துடனும் இந்த சமுதாயத்தில் வாழ்ந்திடவும், வழிகளில் வழிகளில் இருந்து அவர்களை மீட்டு எடுக்கவுமான செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை அனைவருக்கும் உண்டு. திராவிட இயக்கம் திருநங்கைகளுக்கு பல்வேறு சாதனைகளை பெற்று கொடுத்துள்ளது. திராவிட இயக்க தொடர்பாக பகுத்தறிவு சிந்தனை, பெண்ணே சிந்தனை, சமுதாய சிந்தனை போன்ற பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் இன்றைய காலகட்டத்தில் திருநங்கைகள் அரசு சார்ந்த பணிகளும், சுய தொழிலும் செய்து தங்களுடைய வாழ்வாதாரங்களை அதிகரித்து வருகின்றனர். திராவிட இயக்கப் பார்வையில் திருநங்கைகள் குறித்தன ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. இது குறித்து வரும் காலங்களில் ஆய்வு மேற்கொண்டால் திருநங்கைகளுக்கும் சமுதாயத்தில் அங்கீகாரம் கிடைக்கப்பெறும்.*
***திறவுச்சொல்:*** *திருநங்கை, சமூகம், திராவிட இயக்கம். நிகழ்ந்த ஆய்வுகள், பகுத்தறிவுச்சிந்தனை*

மனிதன் தன் பகுத்தறிவுகொண்டு சிந்திக்கச் சிந்திக்க அவனுடைய ஆசாபாசங்களும் வளர்ச்சியடைகின்றன. அதற்கேற்ப முயற்சியும் வலுக்கிறது. வெற்றியும் பெறுகிறான். அதனால் தன் வாழ்க்கை நிலை உயர அவன் இன்பமடைகிறான். உண்மையிலேயே எல்லோரும் பகுத்தறிவுக்கு இடம்கொடுக்க வேண்டும். பகுத்தறிவை வளர்க்க வேண்டும் எந்த செயலையும் ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். மனதிற்குத் தோன்றியதை எல்லாம் பகுத்தறிவு என்று சொல்லிவிடக் கூடாது.

புத்தகத்தைப் படித்து ஒப்புவிப்பது பகுத்தறிவாகி விடாது. சாத்தியம், அசாத்தியம் இன்னதென்று அறியவேண்டும். “மனிதனை நேர்மையாளனாக, யோக்கியனாக ஆக்கப் பயன்படுவது பகுத்தறிவு ஒன்றுதான் ஆகும்”. “பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி ஆகும். உயிர்களில் மனிதனுக்குத் தான் பகுத்தறிவு உண்டு.

இதில் மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு காட்டுளன்பது பொருள். மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு பகுத்தறிவில் தெளிவு அவ்வளவுக்கு பெறுகின்றானோ அவ்வளவு பக்குவமானவன் என்பது பொருள். பகுத்தறிவு என்றால் நாத்திகம் ஆகும். பகுத்தறிவு என்பது ஆதாரத்தைக் கொண்டு தெளிவடைவது." மக்களுடைய கடவுள் நம்பிக்கை, சமயப்பற்று, மூடப் பழக்கவழக்கங்கள் ஆகியவைகளுக்குப் பகுத்தறிவின்மையே காரணம் என்று பெரியார் கருதியுள்ளார். மக்களைப் பகுத்தறி வாளர்களாகச் சிந்திக்க வைத்தாலே போதும்,எல்லா வகையான தீமைகளும் நீங்கிவிடும் என்று கருதிப் பெரியார் பகுத்தறிவினைப் பரப்பியுள்ளார்.

### பகுத்தறிவு அகராதியியல்

கடவுள் என்பது காட்டுமிராண்டிக் கண்டுபிடிப்பு.

வேதம் என்பது சூது நிறைந்தது.

இதிகாசம் என்பது சதிமோசமானது.

புராணமென்பது புளுகுமூட்டை.

அடியார்கள் என்பவர்கள் மடையர்களே ஆவார்கள்.

தேவர் - அசுரர் என்பவர்கள் ஆரியர் - திராவிடர்களே ஆவார்கள்.

சாஸ்திரமென்பது மோசடிக் குவியல்.

முனிவர்கள், ரிஷிகள் முட்டாள்களின் தொகுப்பு.

திராவிட இயக்க இலக்கியங்கள் பகுத்தறிவு சிந்தனைகளை ஊக்குவித்தன. மூடநம்பிக்கைகள் மற்றும் பழமைவாத சிந்தனைகளுக்கு எதிராக குரல் கொடுத்தன.மனிதன் தன் பகுத்தறிவு கொண்டு சிந்திக்க சிந்திக்க அவனுடைய ஆசை பாசங்களும் வளர்ச்சியடைகின்றன அதற்கேற்ப முயற்சியும் வலுக்கிறது.வெற்றியும் பெறுகிறான். அதனால் தன் வாழ்க்கை நிலை உயர அவன் இன்பம் அடைகிறான். உண்மையிலேயே எல்லோரும் பகுத்தறிவுக்கு இடம் கொடுக்க வேண்டும். பகுத்தறிவை வளர்க்க வேண்டும். எந்த செயலையும் ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும்.

### தீண்டாமை

தீண்டாமை பொதுவாக தொடுவது குறிப்பா தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒரு பெருங்கொற்றம் தீண்டாமை என்னும் கொடுமை வளர்வதற்கு பிரமாண பிராமணர் அல்லாத சாதி இந்துக்கள் அனைவருமே காரணம் அவர். இந்து மதப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் மீது சுமத்தப்பட்ட தீண்டாமையானது அவர்கள் செத்தால் ஒழிய செத்த பிறகும் கூட தீண்டாமை ஒழியாது என்பது தத்துவமாகும்.மனிதனுக்கு மனிதன் பார்ப்பது, பேசுவது, பக்கத்தில் வருவது, தொடுவது முதலானவைகள் தீண்டாமையின் தத்துவங்களாக விளங்குகின்றன. "தீட்டு ஏற்படும் என்ற பழைய நம்பிக்கையில் தொட்டு விடாமல் விலகி இருக்கும் நிலை தீண்டாமை".

### தீண்டாமை விலக்கு

தீண்டாமை விலக்கு என்றால் ஒருவரை தொட்டு விடுவதாலும், கோவிலுக்குள் புகவிட்டு விடுவதாலும் தீண்டாமை விலகிப் போய்விட்டது என்று கற்பித்து, அந்தப்படியே இந்நாட்டு மக்களை நம்ப செய்து, அவ்வளவு செய்தாலே போதும் என்று சொல்லி வைத் திருக்கிறோம். தீண்டாமை விளக்கு என்பது மனித சமூக ஜீவகாருண்யத்தையும், எத்துரையிலும் சமதர்ம தத்துவத்தையும் கொண்டதே ஒழிய அது எந்த விதமான மத சம்பந்தத்தையும் கொண்டதல்ல. அது பெரிதும் பகுத்தறிவையும், சுகாதாரத்தையும், சம திருஷ்டியையும் மாத்திரம் கொண்டு யோசிக்கப்பட வேண்டியதே தவிர, மற்றபடி வேறு எந்த விஷயத்தையும் பற்றி கவனிக்க அது சிறிதும் இடமில்லை. தீண்டாமை விலக்கு என்பது தீண்டாதவர்கள் என்பவர்கள் இந்து மதத்தை விட்டு விலக்கினால் தீண்டாமை விலகாது என்கின்ற நிலைமைக்கு வந்து விட்டது.

### மத எதிர்ப்பு

மதம் என்னும் விஷயம் ஆராயத் தகுந்ததேயாகும். மதம் என்பதை நெற்றியில் நாமமோ, விபூதியோ, கோபியோ, சந்தனமோ பூசுவதுதான் என்றும், ஒருவரை ஒருவர்

தாழ்ந்த சாதி - உயர்ந்த சாதி என்று சொல்வதை சொல்லிக்கொள்கிறார்கள். வெறும் உச்சரிப்பைத் தவிர யாதொரு பொருளுமற்றதான சப்தம் கொண்ட வார்த்தையை மதத்திற்குப் பெயராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மதம் என்பது மனிதனின் கூட்டு வாழ்க்கைக்கும், அதற்கேற்ற ஒழுக்கத்திற்கும் ஏற்ற விதிகளைக் கொண்டதேயாகும். மதம் என்பது மனிதனுக்கும் மற்ற உயிர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுவது. "உலகில் கடவுள் பெயரால் உள்ள மதங்களில் குறிப்பிடத்தக்க பெரிய மதங்கள் மூன்று. உலகில் கிறிஸ்துவ மதம் தான் மிகப் பெரிய எண்ணிக்கைக் கொண்ட மக்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் மதமாகும். அடுத்தது இஸ்லாமிய மதம். இது கிறிஸ்துவ மத மக்கள் அளவில் சற்றேறக் குறைய 3 -இல் ஒரு பங்குக்குக் குறையாத மக்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதாகும். மூன்றாவது இந்து மதம் என்பது இஸ்லாமிய மத மக்களில் சற்றேறக்குறைய நான்கிலொரு பங்குகளைக் கொண்டதாகும்."

### மூட நம்பிக்கை

மூடநம்பிக்கை என்பது ஆராயாமல் ஏற்றுக் கொள்வது ஆகும். பழக்கத்தினால் ஏற்றுக்கொள்ளும் அறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கை மூடநம்பிக்கை. அறிவுக்குப் பொருந்தாத, பழக்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து அல்லது கோட்பாடு மூடநம்பிக்கை.

### சுயமரியாதை இயக்கம்

பகுத்தறிவு சார்ந்த சுயமரியாதையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக இயக்கம். சுயமரியாதை இயக்கமானது ஒரு நாளும் யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காக, எதையும் ஒப்புக்கொள்ளக் கூடியதன்று. சொன்னதாக இருந்தாலும், அது தன் பகுத்தறிவுக்குப் பொருத்தமாக இருக்கின்றதா? தனது அனுபவத்திற்கு ஒத்ததாக இருக்கின்றதா? என்பதைப் பார்த்துத் திருப்தியடைந்த பிறகே, எதையும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்கிற கொள்கையைஉடையது. அது எந்தமனிதனையும் அந்தப்படி பரிசோதித்த பிறகே எதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். "மனிதன் சுயமரியாதையுடனும், பகுத்தறிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்ற கொள்கை உடைய சமூக இயக்கம்".

### சமுதாயச் சிந்தனை

மனிதன் ஒருபோதும் தனித்து வாழக் கூடியவன் இல்லை. அப்படி வாழவும் அவனால் முடியாது. அதனால் தான் கூட்டமாக கூடி வாழ்கிறான். சமுதாயத்திற்கு தேவையான ஒவ்வொரு காரியத்தையும் ஒவ்வொருவன் செய்கிறான். அவன் சமுதாயத்தோடு வாழும் ஒரு மனிதராக இருக்கிறான். மனிதன் மனித இனத்தின் மனித சமுதாயத்தில் ஓர் அழகு சிறிய அளவுகோல். மனிதன் பகுத்தறிவு உள்ளவன் மனிதனுக்கும் ஏனைய பிராணிகட்கும் உள்ள வேறுபாடு.

**புல்லாகிப் பூடாய்ப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாமனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்.**

மாணிக்கவாசகர் பாடல் மூலமாக மனிதன் என்ற ஜீவபிராணியும் அசேத்தனமாகவும், தாவரமாகவும், அசரமாகவும் இருந்த பொருள்களில் இருந்தே படிப்படியாக உருமாறி இன்று மனிதனாக உயிர் பெற்று இருக்கின்றான். இந்த சமூகத்தில் சாதி மதம், சாத்திரம் ஒளிய வேண்டும் இவை இல்லை என்றால் இந்த சமுதாயத்தில் அனைத்து மக்களும் சமம் மனித தினம் கடவுள் நம்பிக்கை கடவுள் பக்தி இருப்பது எல்லாம் ஆசை காரணம் மனிதனை ஒழுக்க முடையவனாக்கவோ, மற்றவர்களுக்கு பயன்படும்படி செய்யவோ அல்ல.

### கல்வி

கல்வி என்பது வயிற்றுப் பிழைப்புக்கும், எப்படியாவது வாழ்க்கை நடப்புக்கும் பெருமைக்கும் தான் பயன்படுத்தப்படுகின்றது. இப்படி மூன்று விதமாகப் பயன்படுத்தப்படும்

கல்வியில் மக்களுக்கு ஏற்படும் பணச்செலவு நாள் செலவு, ஊக்கச் செலவு அளவு சொல்ல முடியாததும் சாதாரண மக்கள் தாங்க முடியாததும் ஆகவே இருக்கிறது. "இன்றையக் கல்வி உபயோகமற்றது. அறிவுக்கு ஏற்றதல்ல. வேலைக்குத் தான் பயன்படக்கூடியது.

**கல்யாணம்**

கல்யாணம் என்பது பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது. தெய்விகமாகவோ, பிரிக்க முடியாததாகவோ உண்மையிலிருக்குமாயின் அதில் அவ்விதக் குறைகளும் குற்றங்களும் ஏற்பட முடியுமா என்பதை யோசித்தாலே முழுப்பரட்டு என்பது எப்படிப்பட்ட மனிதனுக்கும் தெய்விகம் என்பது புரியமாற்போகாது. கல்யாணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் கூடி இயற்கை இன்பத்தை நுகரவும். ஒருவரை ஒருவர் காதலித்து ஒருவருக்கொருவர் வாழ்க்கைப் போட்டியில் ஏற்படும் சிரமத்திற்கு இளைப்பாறவும், ஆயாசம் தீர்த்துக் கொள்ளவுமே ஆணுக்கு ஒரு பெண்ணும், பெண்ணுக்கு ஓர் ஆணும் வேண்டியிருக்கிறது என்பதைப் பெரும்பாலோர் சிந்திப்பதேயில்லை, பழங்காலக் காதல் மணம் இன்று மிருகப்பிராய மணம் என்றே சொல்ல வேண்டும்.

கல்யாணம் என்பதற்கு வாழ்த்து என்று பொருள், அது வாழ்க்கைத் துணை என்ற பொருளில் இல்லை.ஏதோ கறுப்பு ஆட்டை வெள்ளாடு என்பது போலவும், கொடிய விம் உள்ள பாம்பை நல்ல பாம்பு என்பது போலவும் இப்படித் தப்பான சொற்களை அமைத்துக் கல்யாணம், திருமணம் என்றெல்லாம் சொல்லி வருகின்றனர்.

**கலப்பு திருமணம்**

சாதி ஒழிய வேண்டுமானால் ஒவ்வொருவரும் தம் சாதியில் திருமணம் செய்யக்கூடாது. நம்மில் சாதியில்லை. பார்ப்பான் ஒரு சாதி, மற்ற நாம எல்லோரும் ஒரு சாதி. இந்த இரண்டிற்கும் நடப்பது தான் கலப்பு மணம்.

**கற்பு**

ஆண் பெண் கூட்டு வாழ்க்கையில் வழங்கிவரும் கருத்தமைந்த கற்பு என்னும் வார்த்தையே, அவசியமற்றது என்றும் அது வாழ்க்கை இன்பத்திற்குக் கேடு பயக்கின்றதே ஒழிய, அதனால் நன்மை இல்லை. கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரமே ஒழிய ஆண்களுக்கு இல்லை. அது பெண்களுக்கு நிர்பந்திப்பது போல் ஆண்களை நிர்ப்பந்திப்பதில்லை. சமுதாயத்தில் ஒழுக்க ஈனம் ஏற்பட்டதிற்குக் காரணம் ஒரு தலைக் கற்பாகும். பெண்கள் அடிமையாக்கப்பட்டதற்கும் இந்த ஒருதலைக் கற்பே காரணமாகும். ஒருதலைக் கற்பு உள்ளவரை சமுதாயம் சீர்படப் போவதில்லை. கட்டுப்பாடு, கடவுள், சமயம், சாத்திரம், புராணம் என்று சொல்லி வந்ததெல்லாம் சொல்லி வருவதெல்லாம் பெண்களை அடிமைப்படுத்தவும். பாமர மக்களை அடிமைப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டனவே அன்றி மக்களுக்கு உரிமை அளிக்க அல்ல. "திருமண வாழ்வில் பெண்ணின் பாலியல் ஒழுக்கம், பெண்ணின் கன்னித்தன்மை தான் கற்பு" என்கிறது.

**கைத்தொழில்**

கைத்தொழில் என்பது வேலை செய்கின்றவன் குறைந்த நேரத்தில் அதிகப் பொருளை உற்பத்தி பண்ணக்கூடியதாகவும், அதுவும் சரீரப்பிரயாசை தேவையின் பாகம் நாளுக்கு நாள் குறைந்து கடினமில்லாமல் செய்யக்கூடியதாகவும், பொருள் மதிப்பும் நாளுக்கு நாள் தரமானதாகவும் இருக்க வேண்டியதோடு. அதை உயர்ந்த வாங்கி பயன்படுத்தும் மக்களுக்கு பொருள்கள் அதிக சரமாய் இருப்பதாகக் காணக்கூடியதோடு. அப்பொருளின் வேலைப்பாடானது மக்களை வாங்கும்படித் தூண்டக்கூடியதாகவும் இருக்கவேண்டும். "கைத்திறமையாலோ சிறு கருவியைப் பயன்படுத்தியோ செய்யப்படும் தச்சுவேலை, கூடைமுடைதல் போன்ற தொழில் கைத்தொழில்" என விளக்கம் கூறுகிறது.

### சமத்துவம்

பெண் மக்கள் தமது உரிமையையும், தேவையையும் ஆண்மக்கள் தடையில்லாமலும், பெண்ணின் தடையின்றி அவர்களுக்குத் துன்பமில்லாமல் பெறுதலும், ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதும் ஆண், பெண் சமத்துவமாகும். “உலகில் மக்கள் அனைவரும் சமம் என்றும் மக்களுக்குச் சம வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்றும் கூறும் கொள்கையே சமத்துவம்”

### பெண்ணியச் சிந்தனை

ஆண் பெண் பற்றிய நிலையில் ஒரே கருத்தானது பல ஆண்டுகளாக நிகழ்ந்து விட்டது. இத்தகைய கருத்துக்கள் பெண்களை அடிமைப்படுத்தும் நோக்கமாக விளங்குகிற. மனித குளத்தில் பெண்கள் சரிபாதி எண்ணிக்கையை பெற்றவர்கள் ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்கள் சிக்கித் தவிக்கும் பெண்களின் நிலையை மாற்றி அமைப்பதே பெண்ணியம் ஆகும். “பெண்கள் மனித சமுதாயத்தில் ஆண்களுக்கு முழு ஒப்படைப்போம் உவமையும் கொண்டவர்கள் ஆவார்கள் என்பேன் என்று பெண்ணியம் அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டும் என்று விரும்புகிறார்.” இந்த சமூகத்தில் பெருகிவரும் பெண்களுக்கு எதிரான பிரச்சனைகளை தீர்க்க பெண்களே போராடி வருகின்றனர். சமூக கட்டுப்பாடுகளுக்கு கொள்ளும் கருத்துப் போக்கும் மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு பெண்கள் பேசுவதும் எழுது வதும் போராடுவதும் பெண்ணிய கொள்கை களாக ஏற்கப்படுகிறது. இந்த சமூகத்தில் பெண்களை மதிக்கப்படும் பொழுது இந்த சமுதாயம் மிளரச் செய்யும். பெண் இயற்கையானவள். இயற்கை எப்படி சமுதாயத்திற்கு பயன்படுகிறதோ அதே போல பெண்ணும் சமுதாயத்திற்கு பயன்படுகிறாள். ஆகையால் பெண்ணும் இயற்கையும் ஒன்று என கூறுகின்றனர். “பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதை அற்றிடுங்காணீர்.”

### பெண்ணியத்தை முழுமையாக புரிந்து கொள்ள சில அறிஞரின் கருத்துக்கள்

‘பெண்ணியம்’ என்பது பெண்களின் எல்லாச் சிக்கல் களையும் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம், உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொரு ளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற் படுத்த முடியும் என்கிறார் சார்லட் பன்ச் (Charlotte Bunch). இதையே, பார்பரா ஸ்மித்தின் (Barbara Smith) கூற்றில் சற்று விரிவாகக் காணமுடிகிறது. ‘பெண்ணியம் என்பது எல்லாப் பெண்களையும் அரசியல் மற்றும் பிற அடிமைத்தளையி லிருந்து விடுவித்தல் என்ற கொள்கை உடையதாகும். இளம் பெண்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், ஏழைப் பெண்கள், தன்னினச் சேர்க்கையுடைய பெண்கள் (Lesbians) வயதான மூதாட்டிகள் மற்றும் பொருளாதார நிலையிலும், மரபு மண முறையிலும் துன்புறும் பெண்கள், இவர்கள் அனைவருக்கும் விடுதலை பெற்றுத் தருவதே இதன் இலக்காகும். இதன்றி, இயல்பான அல்லது சற்றுக் குறைவான முயற்சியில் ஈடுபடுவது பெண்ணியம் ஆகாது என்று அவர் விளக்கியுள்ளார்.

டோனா ஹாக்ஸஸ்ட் மற்றும் சூ மாரோ (Donna Hawx& hurst and Sue Morrow) என்பவர்கள் பெண்ணியம் என்பது தீவிர செயல்பாடுடையது என்று கூறுவது முற்கண்ட பார்பரா ஸ்மித்தின் கருத்தோடு ஒத்துச் செல்கிறது. இவர்கள், ‘பெண்ணியம் தனிப்பட்ட முறையில் மட்டுமன்றி, அரசியல் மற்றும் தத்துவ நிலையாகவும் செயல்பட வேண்டி இருப்பதால், இதற்குத் தேவை தீவிர நடைமுறை செயல்பாடுதான். தீவிரம் இல்லாவிட்டால் பெண்ணியம் என்ற சொல் அர்த்தமற்றதாகி தானே இல்லாமல் போய்விடும்’ என்று அப்பெண்கள் கருதுகின்றனர்.

சார்லட் பன்ச், பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல; சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்” என்கிறார். அதாவது, இவர். பெண்ணியத்தை, ‘சமூக நிலை மாற்றக்

கோட்பாடு' (Transfor& mational politics of the Society) என்று விளக்குகிறார். தெரசா ப்ளிங்டன் (Teresa Billington) என்ற பெண்மணியும் 'பெண்ணியம் உலகையே மாற்றி யமைக்கும் இயக்கம்' என்று கருத்துரைக்கிறார்.

பெண்ணியம் என்பது பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்கம் (A Movement for change in the position of Women) என்பது ரோஸலிண்ட் டெல்மார் (Rosalint Delinar) கருத்தாகும். பெண்களைச் சமுதாய அளவில் முன்னேற்றுவது என்பது பெண்ணியத்தின் மையச் செயற்பாடாக அமைந்துள்ளனர் தால், இதை ஒரு சிறந்த சமுதாய இயக்கமாகக் கருத இயலும் என்பது இவருடைய எண்ணமாகும். 'காரணம்' (The cause) என்ற பெண்ணியம் விளக்க நூலை எழுதிய ரே ஸ்டான்சி அம்மையாரும், பெண்ணியத்தின் மையச் செயற்பாடு சமுதயா பயத்தில் பெண்களின் நிலையை மாற்றுவதாகும் (அடிமைத் தனத்தைக் களைதல்) என்று எடுத்துரைக்கிறார்,

பெண்ணியவாதி என்பவர் யார்? (Who is Feminist?) என்ற வினாவிற்கு ரே ஸ்டான்சி பதிலுரைக்கும் போது, பெண்ணியா வாதி என்பவர் பெண்களின் போராட்டத்திற்குத் துணை நின்று, அவர்களின் அடிமைத்தனத்தைக் களைந்தெறிய உதவுவ தோடு, அவரின் மையக் கொள்கையே சமுதாயத்தில் பெண்களின் நிலைமாற்றம் என்பதைப் பற்றியதாக இருக்க வேண்டும் என்கிறார்.

சைமன்-டி-பெவாயர் என்ற அம்மையாரும் பெண்ணியா வாதியை இனம் காட்ட முற்படுகையில், 'பெண்களின் நிலைக மாற்றம்' குறித்து அழுத்தமாகப் பேசியுள்ளார். 'பெண்ணோ ஆணோ- சமுதாயத்தில் பெண்களின் நிலையை மாற்றப் போராடுவதோடு, வகுப்பு வேறுபாடின்றி எல்லா நிலைகளிலும் பெண்களின் உயர்வுக்கு உழைப்பவராக இருக்க வேண்டும்" என்கிறார்.

மேற்கூறிய சுருத்துக்களை வைத்து ஆராய்கின்ற போது பெண்ணியம் என்பது பெண்களின் அடிமை நிலையை மாற்ற முற்படும் கோட்பாடு என்பதும் பெண்ணியவாதி என்பவர் பெண்களின் நிலை மாற்றத்திற்காகக் குரல் கொடுப்பவர் அல்லது பாடுபடுபவர் என்பதும் விளக்கம் பெறுகிறது.

## எதிர்காலத்தில் பெண்ணியம்

சமுதாயத்தில் கிளைகளாக உள்ள பல்வேறு சமூகவியல் அணுகு முறையானது பெண்களிடம் திணிக்கப்பட்டுள்ள சாதி, மதம், கடவுள் நம்பிக்கை சடங்கு முறை, விழாக்கள் சமயம் போன்ற அனைத்து கூறுகளின் தாக்கம் நம்முடைய சமுதாயத்தில் எந்த அளவு பாதிப்பையும் ஏற்படுத்துகிறது. இவற்றுள் இருந்து விடுவிக்க இந்த சமூகம் பெண்ணியத்திற்கு உறுதுணையாக இருக்கவேண்டும். பெண்விடுதலை, ஆண்களால் நடைப்பெறுவது என்பது இல்லை எக்காலத்திலும் நடைபெறாது. ஆதலால், தங்கள் சுதந்திரத்தை பெண்களே எடுத்துக்கொள்ள வேண்டும். தங்கள் மேல் படிந்துள்ள தவறான படிமங்களை உடைத்து நொறுக்க வேண்டும். இதுபோல் செய்யாமல் பெண் விடுதலை அடையமுடியாது.

## நிகழ வேண்டிய ஆய்வுகள்

திருநங்கையருக்கான பெயர் காரணம் : "அரவாணி" என்ற பெயரை காட்டிலும் திருநங்கை என்ற பெயரே அவர்களை கௌரவப்படுத்துகிறார்கள். "நங்கை" என்பது பெண்ணியம் குறிக்கும் சொல்லாகும். "திரு" என்பது "சிறந்த மதிப்பிற்குரிய", "மரியாதைக்குரிய" என்ற பொருளைக் குறிக்கும். "திருநங்கை" என்பதற்கு பெண்ணில் சிறந்தவள் என்பதை குறிக்கும். "அரவாணி" என்று அழைக்கப்பட்டவர்களைத் "திருநங்கை" என்று பெயரிட்டவர் நர்த்தகி நடராஜ் என்பவர் ஆவார். அதை சட்ட பூர்வமாகிய பெருமை தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களையே சேரும். சமுதாயத்தில் திருநங்கைகளின் மதிப்பும் மரியாதையும்: பண்டைய காலத்தில் திருநங்கைகள் அரண்மனைகளில் பணிபுரியும் பணிப் பெண்களாகவும், அரசின் உடைமைகளைப் பாதுகாப்பவர்களாகவும் பணியமர்த்தப்பட்டனர். மேலும், அரசிகளுக்கு உற்ற தோழிகளாகவும் விளங்கினர். ஆனால் தற்காலத்தில் இவர்கள்

கேலிப் பொருளாகச் சித்திரிக்கப்பட்டு இழிவு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையிலிருந்து மீண்டு திருநங்கையர்களில் சிலர் பல்வேறு துறைகளில் சாதிக்கத் தொடங்கி விட்டனர். அரசியல், ஊடகத்துறை, அரசுப் பணி, வழக்கறிஞர், கலைத்துறை போன்ற துறைகளில் சாதனைகளைப் புரிந்த பல்வேறு திருநங்கைகள் குறிக்க பதிவுகளை இங்கு காணலாம். படைப்பாளிகள் தங்களது படைப்புகளின் வழி தலித்துகள், திருநங்கைகள்; பழங்குடியின மக்கள் போன்றவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து வதற்கான கருத்துக்களை முன்வைக்கின்றனர். திருநங்கைகளின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்களுக்கும் தங்களது படைப்புகளில் திருநங்கைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அவற்றில் முதன்மையானது திருநங்கைகளுக்கு உரிய கல்வி கிடைக்க வேண்டும்.

**கல்வியில் இடஒதுக்கீடு**

சமூகம் மற்றும் பொருளாதாரம் அளவில் பின் தங்கி இருக்கும் மாணவர்களுக்கு அவர்களின் சாதி விகிதாச்சார அடிப்படையில் பள்ளி மற்றும் கல்லூரிச் சேர்க்கையில் இட ஒதுக்கீடு இருப்பதால் மேற்கண்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயின்று முன்னேறி வருகின்றனர். ஆணுமில்லாமல், பெண்ணுமில்லாமல் பால் மாறிப் பிறந்ததால் சமூகத்தால் விளிம்புநிலைக்குத்தள்ளப்பட்டுள்ள திருநங்கையருக்குக் கல்வியில் இடஒதுக்கீடு வழங்கப்படாமல் ஒதுக்கப்படும் நிலை உள்ளது. தற்போது நடைமுறையில் இருக்கும் கள்ளர் சீர்திருத்தப் பள்ளி, பழங்குடியின மாணவர் பள்ளி, ஆதி திராவிடர் பள்ளி போன்ற பள்ளிகளில் அந்த அந்தச் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயில்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனைப் போலவே திருநங்கையருக்கெனதனிக்கல்விநிலையங்களை அரசு ஏற்படுத்த முன்வர வேண்டும். தமிழக அரசு திருநங்கைகளை மூன்றாவது பாலினமாக அறிவித்து அவர்களுக்கும் தனி இடத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளது. அவர்கள் பள்ளிப்படிப்பை முடித்துக் கல்லூரியில் சேர்ந்து மேற்படிப்பைத் தொடர்வதற்காக அரசு, 353 சமூக நல மற்றும் சத்துணவு திட்டத்துறை (ஆணை எண் 199/20.10.2007) மூலம் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு உத்தரவு அனுப்பியுள்ளது. கல்லூரி விண்ணப்பப் படிவத்தில் ஆண் / பெண் / திருநங்கை என்றும் ஆங்கிலத்தில் Male/Female/ Trangendar என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்லூரிக் கல்வித்துறையின் பரிந்துரையை ஏற்றுத் தமிழகத்தில் தனியார் கல்லூரிகளிலும் குறிப்பாக ஆண், பெண் என்றும் இருபாலரும் பயிலும் கல்லூரிகளிலும் திருநங்கையரைச் சேர்த்திட அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும். பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை இருத்தல் அவசியமாகும். கல்லூரிகளில் திருநங்கைகளுக்கென்று தனிக் கழிப்பிட வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். அரசியல் அரசியல் என்பது சமுதாய வாழ்க்கைக்கு அமைதியைத் தருவது. சமுதாயத்தில் பலர் கூடி வாழ்வதற்கும், பொருளியல், ஒழுங்கியல் முறைகளுக்கும் அரசியலே வழிவகுக்கிது. இன்றைய காலகட்டத்தில் அரசியல் கட்சிகள் திருநங்கையரைத் தங்களின் கட்சியின் சார்பில் தேர்தலில் நிறுத்துவதற்குத் தயக்கம் காட்டுகின்றன. திருநங்கையரை நம்பி மக்கள் தங்கள் கட்சிக்கு வாக்களிக்க முன்வரமாட்டார்கள் என்பது இதற்குக் காரணமாகும். கட்சிகள் வாய்ப்பளிக்காவிட்டாலும் திருநங்கையரில் சிலர் தேர்தலில் சுயேட்சையாக நிற்பது உண்டு. 2014 மக்களவைத் தேர்தலில் "பாரதி கண்ணம்மா" என்ற திருநங்கை மதுரை தெற்குத் தொகுதியில் தனித்துப் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்தார். இவருடைய விண்ணப்பத்தைத் தேர்தல் அதிகாரி ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பெண்ணாகப் போட்டியிட முடியாது. ஆண் என்ற பாலின அடிப்படையில் போட்டியிடலாம் என்று கூறியதன் காரணமாகப் பாரதி கண்ணம்மா அதனை ஏற்க மறுத்துப் போட்டியிடுவதிலிருந்து விலகி விட்டார்.

தேவி என்னும் திருநங்கை சேலம் மகுடஞ் சாவடியில் பிறந்தவர். 12ஆம் வகுப்பு வரை

படித்துள்ளார். 2016 இல் சென்னை ஆர்.கே.நகர் சட்டப்பேரவைத் தொகுதியில் முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவை எதிர்த்து “நாம் தமிழர் கட்சி” சார்பில் வேட்பாளராகப் போட்டியிட்டார். தற்போது ‘தாய்மடி’ என்ற அறக்கட்டளையை நடத்தி வருகிறார்.

சட்டீஸ்கர் மாநிலம் ராய்கார்க் மாநகராட்சியில் மாநகரத் தந்தையைத் தேர்வு செய்ய நடந்த தேர்தலில் ‘மதுகின்னார்’ என்ற திருநங்கைப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். இவர் 8ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர். தேர்தல் செலவிற்காகப் பல்வேறு வேலைகளைச் செய்தும், இரயில்களில் ஆடிப்பாடியும் பணம் சேமித்தாகக் கூறியுள்ளார். இந்தியாவில் மாநகரத் தந்தையாகத் தேர்வு செய்யப்பட்ட முதல் திருநங்கை மதுகின்னார் ஆவார்.

**காவல்துறை**

2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம் நடத்திய காவல்துறை துணை ஆய்வாளர் பணிக்கான தேர்வில் பிரித்திகா யாசினி என்ற திருநங்கை தேர்ச்சி பெற்று உதவிக் காவல் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்தார். இவர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இந்தியாவில் - தமிழகத்தில் காவல் துறையில் பணியாற்றும் முதல் திருநங்கை என்ற பெருமைக்குரியவர் பிரித்திகா யாசினி.

**மருத்துவர்**

தூத்துக்குடி மாவட்டம் நிலக்குடியில் தாரிகா பானு பிறந்தவர். இவருடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த திருநங்கை கிரேஸ் பானு. தாரிகா பானு மூன்றாம் பாலின அடையாளத்துடன் படிக்க வேண்டும் என்ற ஆசையுடன் தனது படிப்பை மேற்கொண்டார். இறுதியாக உயர்நீதி மன்றத்தின் உத்தரவின்படி அரும்பாக்கத்தில் உள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் தன்னுடைய படிப்பைத் தொடங்கியுள்ளார். திருநங்கைகளில் முதன்முதலில் மருத்துவம் பயில்பவராகத் தாரிகா பானு விளங்குகிறார்.

**வழக்கறிஞர்**

சத்திய ஸ்ரீ சர்மிளா ராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடியைச் சேர்ந்தவர். ஏற்கனவே சட்டக் கல்லூரியில் படிப்பை முடித்த இவர் வழக்கறிஞராகத் தனது வாழ்க்கையைத் தொடர விரும்பினார். பல்வேறு போராட்டங்களுக் கிடையில் தற்போது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் பதிவு செய்து தமிழகத்தின் முதல் திருநங்கை வழக்கறிஞராகச் சத்திய ஸ்ரீ சர்மிளா பணியாற்றி வருகிறார்.

**ஊடகத்துறை**

பத்மினி பிரகாஷ் என்ற திருநங்கை ‘லோட்டஸ்’ தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றி வருகிறார். 2014 ஆகஸ்ட் 15ஆம் நாளில் சுதந்திர தினத்தன்று பத்மினி பிரகாஷ் செய்தி வாசித்த நிகழ்வு நேரடியாக ஒலிபரப்பு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. தொலைக்காட்சியில் செய்தி வாசித்த முதல் திருநங்கை என்ற பெருமை பத்மினி பிரகாஷ்க்கு உண்டு.

**திராவிட இயக்க செயற்பாடுகள்**

ஆணாகப் பிறந்து பெண்ணாகவும், பெண்ணாகப் பிறந்து ஆணாகவும் வாழ்பவர்கள் முறையே திருநங்கை, திருநம்பி என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். இந்தியாவில் ஆணாய்ப் பிறந்து பெண்ணாய் மாறுபவர்கள் தான் அதிகம். சமுதாயத்தில் திருநங்கைகளின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரிய ஒன்றாக உள்ளது. இந்நிலையை மாற்ற கடந்த சில ஆண்டுகளாகத் திருநங்கையர்களிடமிருந்தும், சமூகவியலாளர்களிடமிருந்தும் குரல்கள் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துவிட்டன. தமிழகத்தில் கலைஞர் காப்பீட்டுத் திட்டம், இலவச வீட்டுமனைத் திட்டம், இலசவ உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை. நலவாரியம், சுயஉதவிக் குழுக்கள், சிறுகுறு கடன் வசதி, வாக்காளர் பட்டியலில் மூன்றாம் பாலினத்தவர் என்று குறிப்பிடுதல், கல்லூரிகளில் இட ஒதுக்கீடு உள்ளிட்ட பல திட்டங்களை அரசு அறிவித்துள்ளது. இவைதவிர்த்துப் பெண்களுக்கு உள்ளது போன்று

பொதுஇடங்களில் திருநங்கைகளுக்கென தனிக் கழிப்பறை, பேருந்து, தொடர் வண்டி, காவல் படை, எல்லைப் படைகளில் திருநங்கைகளுக்கென தனிப்படைப் பிரிவுகள் தொடங்கப்பட வேண்டும். வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு போன்றவை உருவாக்கப்பட்டால் திருநங்கைகளின் வாழ்வாதாரப் பிரச்சினை தீர்வதற்கு வாய்ப்புள்ளது.

**நலவாரியம்**

திருநங்கைகளுக்கு உதவும் தமிழக அரசின் நடவடிக்கையின் விளைவாக உருவானதுதான் திருநங்கைகள் நலவாரியம். ஒருவகையில் மாற்றுப் பாலினத்தவரின் பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு அடையாள அட்டை, அரசு மருத்துவமனைகளில் பால் மாற்று அறுவை சிகிச்சை அளித்தல் போன்ற திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது. 2008 ஏப்ரல் 15ம் நாள் திருநங்கையரின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் அரசாங்கம் திருநங்கைகள் நல வாரியத்தை அமைத்துள்ளது.

**அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை**

திருநங்கை என்பதற்கான அடையாள அட்டை அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட சமூக நலத்துறை மூலம் மருத்துவர்களைக் கொண்டு பரிசோதித்த பின்பு திருநங்கை என்ற சான்றிதழ் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு திருநங்கைகள்நலவாரியம், சமூகநலம், சத்துணவு திட்டத்துறை சார்பில் திருநங்கையான பிறகு பெயர். தற்போதைய மற்றும் நிரந்தர முகவரி, உறுப்பினர் எண். மாவட்ட சமூக நல அலுவலரின் கையொப்பம் உள்ளிட்ட விபரங்கள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் இவ்வமைப்பானது கடந்த 2012 முதல் தமிழகம் முழுவதும் உள்ள மாற்றுப் பாலினத்தைச் சேர்ந்தவர்களை இனம் கண்டறிந்து கணக்கெடுப்பு செய்து அதன் மூலமாக அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கும் நோக்கத்தில் குடும்ப அட்டை களையும் வழங்கி வருகிறது.

**காப்பீடு**

தமிழ்நாட்டில் உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு ஏராளமான ஏழைகள் நடுத்தர மக்கள் பயன் அடைந்து வருகின்றனர். காப்பீட்டுத் திட்டம் மூலமாக மருத்துவ சிகிச்சை பெறுவதற்குக் குறைந்த அளவு பணம் போதுமானது. இத்திட்டத்தில் சேர்வதற்குக் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72 ஆயிரத்திற்குக் குறைவாக இருக்க வேண்டும். மாவட்ட சமூக நலத்துறை சார்பில் தேர்வு செய்யப்பட்ட திருநங்கைகள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ளனர். இவர்களில் சிலருக்கு நல வாரிய உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் திருநங்கைகளுக்கும் காப்பீட்டுத் திட்டம் பயன் அளிப்பதாக உள்ளது. இது திருநங்கையருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது.

**ஓய்வூதியம்**

மேனாள் தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையின்படி 40 வயதிற்கு மேல் உள்ள திருநங்கைகளுக்கு ஓய்வூதியமாக மாதம் ரூ.1000/-வழங்கப்பட்டு வருகிறது. திருநங்கையர்களுக்கு வருமானம் ஈட்டித்தரக் கூடிய தொழில் தொடங்க 25 சதவீத மானியத்துடன் கூடிய கடன் (15 இலட்சம் வரை) வழங்கும் திட்டத்தைச் வயதுக்கும் மேற்பட்ட ஏழ்மை நிலையிலுள்ள திருநங்கைகளுக்கு இத்திட்டம் வீவுவயீ நலத்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. 40 மிகுந்த பயன் தருவதாக அமையும்.

**நிதியுதவி, சுயஉதவிக்குழு**

திருநங்கைகளுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிப்பதுடன் அவர்கள் தனியாகவோ அல்லது சுயஉதவிக் குழுக்களாகவோ இணைந்து தொழில் புரியும் வகையில் ஆவன செய்யப்படுகிறது. திருநங்கைகள் தொடங்கும் தொழில்களுக்கு மாநில அரசின் புதிய சிறுதொழில் கொள்கையில் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. இளம்வயதில் திருநங்கைகளாகத் தங்களை உணர்பவர்களுக்கு இடைக்காலத் தங்கும்

விடுதி ஒன்று தொண்டு நிறுவனங்களின் மூலம் நடத்தப்படுவதற்குத் தமிழக அரசு நிதியுதவி அளிக்கிறது.

திருநங்கைகளின் பொருளாதாரத்தை உயர்த்த சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்களின் வறுமை நிலை ஒழியும். திருநங்கைகள் சுய உதவிக்குழு என்பது ஆண், பெண் இருபாலரைத் தவிர மூன்றாம் பாலினமான திருநங்கை, திருநம்பி, கோத்தி உள்ளிட்ட மாற்றுப்பாலித்தனவரை மட்டும் உள்ளடக்கிய ஒன்றாகும். இதன்வழி மாற்றுப்பாலினத்தவர் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

முதல்முறையாக திருநங்கைகளை உறுப்பினர்களாகக் கொண்ட பத்து சுயஉதவிக் குழுக்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களுக்குத் தேவையான வழங்கப்பட்டு பயிற்சிகள், சூழல்நிதி மற்றும் பொருளாதாரக் கடன்கள் அவர்களுடைய உயர் தரம் வாழ்க்கைத் உதவி செய்யப்படுகிறது. தகுதியுள்ள சுய உதவிக்குழுக்களுக்குத் தொழில் துவங்கப் பதினைந்து இலட்ச ரூபாய் வரை, இருபத்தி ஐந்து சதவீத மானியத்துடன் பொருளாதாரக் கடன் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. பெட்டிக் கடை, மளிகைக்கடை, உணவகம், துணி வியாபாரம், பால் வியாபாரம், வேளாண் பொருள்கள் விற்பனை, அழகு நிலையம், சோப்பு வியாபாரம்,செங்கல் சூளை அமைத்தல் உள்ளிட்ட சுய தொழில்களுக்கு வங்கிகள் கடன் வழங்குகின்றன.

### வேலை வாய்ப்பு

திருநங்கைகள் அனைவரும் உடலாலும், மனதாலும் மிகவும் திறமை வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். தற்போது பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகின்றனர். படித்த திருநங்கை களை துறைகளில் பணியமர்த்தலாம். வீரம் மிகுந்த காவலர் பணி, இரக்கமுள்ள அரசுத்துறை மற்றும் தனியார் மருத்துவப் பணி, நேர்மையான மாவட்ட ஆட்சியாளர் மற்றும் நீதிதுறையில் நீதிபதி பணி, வெளிச்சம் கொடுக்கிற மின்சாரத் துறையிலும் மற்றும் கணினி பயன்பாடு உள்ள அனைத்துத் துறைகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இந்தச் சமூகத்தில் மதிக்கப்படுவராகத் திகழச் செய்ய வேண்டும்.

படிக்காத திருநங்கைகளுக்கு துப்புரவுப் பணி, ஓட்டுநர் உரிமம் கொடுத்து ஓட்டுநர் பணி, அம்மா உணவகத்தில் உணவு சமைப்பவர் மற்றும் பரிமாறுபவர் பணி ஒவ்வொரு துறையிலும் உதவியாளர்கள் பணி போன்ற பணிகளில் நியமனம் செய்யலாம். கிராம சேவை, சமூக சேவை, நகர்ப்புறக் கட்டிட வேலை, சாலையைச் சீர்படுத்தும் வேலை, துணிக்கடை, காய்கறி வியாபாரம். மளிகைக்கடை, பல்பொருள் அங்காடி ஆகியவற்றில் வேலைவாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

### தொண்டு நிறுவனங்களின் பணி

திருநங்கைகளின் நலனுக்கான செயல்பட்டு வரும்தொண்டுநிறுவனங்கள்அந்தந்தமாவட்டங்களில் தங்களுடைய நிறுவனங்களைப் பதிவு செய்து கொள்ளும் வகையில் பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளஏதுவானபடிவங்கள்மாவட்ட சமூகநல அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை பொன்னி அவர்களுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், திருநங்கை களின் நலனுக்காக ஆற்றிய சிறந்த சேவையை பாராட்டி 2025 ஆம் ஆண்டிற்கான “சிறந்த திருநங்கை விருதினை” வழங்கியுள்ளனர்.இதன் மூலமாகவும் திருநங்கையர்கள் பயன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அடைய வாய்ப்பு மேலும் திருநங்கைகளின் விழிப்புணர்வுக்கான கருத்தரங்குகளை நடத்துதல், வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருதல் போன்ற பணிகளைத் தொண்டு நிறுவனங்கள் செய்து வருகின்றன.

### முடிவுரை

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டு அளவில் உலகம் முழுவதும் பல்வேறுசமூக சீர்திருத்த இயக்கங்கள்தோன்றி வருகின்றது.

பெண்களின் முன்னேற்றம் ,பகுத்தறிவு சிந்தனைகள் மற்றும் திருநங்கைகளின் வாழ்வாதாரங்களைப் போற்றும் வகையில் இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**பார்வை நூல்கள்**

1. தந்தை பெரியார், பகுத்தறிவாளராக வேண்டும் ஏன்?
2. பத்மபாரதி, திருநங்கையார் சமூக வரைவியல்.
3. கி.அய்யப்பன், அரவாணியம்
4. உணர்வும் உருவமும்.